## பத்திரிக்கை செய்தி

## உட்பிரிவு பட்டா வழங்க ரூ.3,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய பிர்கா சர்வேயர் மற்றும் கிராம உதவியாளர் கைது

புகார்தாரர் திரு.ஏழுமலை, நர்மதா நகர், குமாரகுப்பம், வளவனூர், விழுப்புரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் நிலத்தினை உட்பிரிவு செய்ய விழுப்புரம் தாலுக்கா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.ஸ்டாலின், சர்வேயர், நரியூர் பிர்க்கா, விழுப்புரம் மாவட்டம் மற்றும் திரு.கிருஷ்ணன், கிராம உதவியாளர், நரியூர் கிராமம், விழுப்புரம் மாவட்டம் அவர்கள் தங்களுக்கு ரூ.3,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விழுப்புரம் மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் 23.04.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ஸ்டாலின், சர்வேயர் லஞ்ச பணம் ரூ.3,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.